பக்கங்கள் - 08

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

மின்னிதழ்

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005

இல.44.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
டிடுடுரு

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 09 ஞாயிற்றுக்கிழமை (23.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை

## வெளியிட்டிருக்கும் எண்ணிக்கையைவிட 3 மடங்கு அதிகமாக இருக்கலாம்

### உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு

(ஜெனிவா)

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை, தற்போது உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையை விடவும் இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக இருக்கலாம் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவோர் மற்றும் அதனால் மரணிப்போரின் எண்ணிக்கை உள் 02

15 வயது சிறுமி உட்பட

## கொரோனாவால் வடக்கில் நால்வர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

15 வயது சிறுமி உட்பட வடக்கில் கொரோனாவால் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சி திருவையாறு கிராமத்தைச் சேர்ந்த 77 வயதுடைய பெண்ணொருவர் கொரோனாவால் மரணமடைந்துள்ளதாக மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சுகயீனம் காரண 02

செவ்வாயன்று

## மதுபான நிலையங்கள் பூட்டு

(கொழும்பு)

பயணக் கட்டுப்பாடுகள் மே 25ஆம் திகதி நீக்கப்பட்டாலும் அன்றைய தினம் அனைத்து மதுபானக் கடைகளும் மூடப்படும் 02

கொரோனா

## +2,906

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,906 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள 02

ஆபத்தான கட்டத்தில்

# வடக்கு மாகாணம்

## கொரோனாவால் 4 பேர் உயிரிழப்பு; 156 பேருக்கு தொற்று உறுதி




*(யாழ்ப்பாணம்)*

**வட மாகாணத்தில் கொரோனாவால் சிறுமி உட்பட நால்வர் உயிரிழந்ததுடன் கடந்த 24 மணி நேரத்தில் 156 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.**

**யாழ்.போதனா மற்றும் யாழ்.பல்கலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே இவர்கள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 23 பேரும் யாழ். போதனாவில் 11 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 2 பேரும் சங்கானை பிரதேச வைத்தியசாலையில் ஒருவரும் அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 02

கொரோனா நெருக்கடி

## வெசாக் நிகழ்வுகள் அனைத்தும் இரத்து

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் கொரோனா நெருக்கடி காரணமாக தேசிய வெசாக் விழாக்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று பௌத்த விவகார ஆணையகத் தின் ஆணையாளர் 02

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

## பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படமாட்டாது?

(கொழும்பு)

எதிர்வரும் 25ஆம் திகதி அதிகாலை 4.00 மணி முதல் இரவு 11 மணிவரை நீக்க திட்டமிடப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகளை இரத்துச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 28ஆம் 02

தீக்காயத்துக்கு உள்ளான

## மூதாட்டி உயிரிழப்பு வேலணையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்க 02

யாழ்.அச்சுவேலியில்

## விசர் நாய் கடித்ததில் குடும்பப் பெண் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

விசர் நாய்க்கடிக்கு இலக்காகி குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அச்சுவேலி கதிரிப்பாய் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான செல்வகுமார் சுமேரா (வயது-43) 02

## உச்சநிலையில் கொரோனா மேலும் 44 பேர் உயிரிழப்பு

### ஒரே நாளில் அதிகூடிய மரணங்கள்



(கொழும்பு)

இலங்கையில் உச்சநிலையில் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருகின்றது.

மேலும் 44 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்றுக் காலை அறிவித்துள்ளது.

அதற்கமைய இலங் 02

## கொரோனாவால்...

மாக நேற்று முன்தினம் காலை அவசர நோயாளர் காவு வண்டி மூலம் திருவை யாறு கிராமத்தில் உள்ள அவரது வீட்டி லிருந்து வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் குறித்த பெண் உயிரிழந்துள் ளார்.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

மேலும் வவுனியாவில் கொரோனா தொற்று காரணமாக ஒருவர் நேற்று மாலை மரணமடைந்துள்ளார்.

கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்ட நிலையில் வவுனியா வைத்திய சாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

வவுனியா, கிடாச்சூரிபகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே இவ்வாறு மரண மடைந்தவராவார்.

மேலும் வவுனியாவில் கொரோனா தொற்று காரணமாக 40 வயதுடைய மேலும் ஒருவர் நேற்றிரவு மரணமடைந் துள்ளார்.

கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்ட நிலையில் வவுனியா வைத்திய சாலையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வரே சிகிச்சை பலனின்றி மரணமடைந் துள்ளார்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இதன்மூலம் வவுனியாவில் கொரோனா காரணமாக நேற்று இரண்டாவது நபர் மரணமடைந்துள்ளார். (ம-3,250,350)

## வெசாக் நிகழ்வு...

ஜெனரல் சுனந்த காரியப்பெரும தெரி வித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வெசாக் விழா குறித்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில் தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக, நயினா தீவு நாகதீப புராண விகாரையில் நடை பெறவிருந்த தேசிய வெசாக் விழா இரத் துச் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வின் அறிவுறுத்தலின் பேரில் கொழும் பிலுள்ள ஹுனுபிட்டி கங்காராமய விகா ரையில் நடைபெறவிருந்த வெசாக் விழா வும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 3 வெசாக் நினைவு முத்திரை கள் வெளியிடப்பட்டுள்ளன. இறுதி முத் திரை மே 24ஆம் திகதியன்று வெளியிட எதிர்பார்த்திருந்தபோதிலும், தற்போதைய சூழ்நிலையில் அதை வெளியிடுவது தொடர்பில் முடிவெடுக்கவில்லை" என் றார். (ம-3)

## உச்ச நிலையில்...

கையில் பதிவாகியுள்ள கோவிட் - 19 தொற்று மரணங்களின் மொத்த எண் ணிக்கை 1,132 ஆக உயர்வடைந்துள் ளது.

அவர்களில் 23 பேர் 71 வயதைக் கடந்தவர்களாவர். 11 பேர் 61 தொடக்கம் 70 வயதிற்குட்பட்டவர்கள், 7 பேர் 51 தொடக் கம் 60 வயதிற்குட்பட்டவர்கள், இருவர் 31 தொடக்கம் 40 வயதிற்குட்பட்டவர்கள், ஒருவர் 21 தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட வர் ஆவர். (ம-3)

## மதுபான...

என்று மதுவரித் திணைக்களப் பேச்சாளர் கபிலா குமாரசிங்க அறிவித்துள்ளார்.

நாட்டில் நடைமுறையில் இருக்கும் பயணத் தடை வரும் 25ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு நீக்கப்பட்டு மீளவும் அன்றிரவு 11 மணிக்கு நடைமுறைப்படுத் தப்படும்.

மீளவும் மே 28ஆம் திகதி வெள்ளிக் கிழமை அதிகாலை 4 மணிக்கு நீக்கப் படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பயணக் கட்டுப்...

திகதி அதிகாலை 4 மணிவரை பயணக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 25ஆம் திகதி வீடுகளில் இருந்து ஒருவர் மாத்திரம் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துகளை கொள் வனவு செய்ய வீட்டுக்கு வெளியில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பயணக்கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் சட்டங்களை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

பயணக் கட்டுப்பாட்டினை மீறும் நபர் களை கைது செய்வதற்காக 22 ஆயிரத் திற்கும் மேற்பட்ட பொலிஸார் கடமை களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெளியிட்டிருக்...

ளிட்ட விபரங்களைச் சரியாக வெளியிடு வதற்கு உலக நாடுகள் போராடிக் கொண் டிருக்கின்றன என்றும் அவ்வமைப்பு குறிப்பிட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வருடாந்தம் உலக சுகாதாரப் புள்ளிவிபர அறிக்கை வெளியிடப்படும். அந்தவகை யில் 2021ஆம் ஆண்டிற்கான அறிக்கை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியளவில் உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றினால் பலி யானோரின் எண்ணிக்கை 1.8 மில்லியன் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப் பட்டது.

எனினும் உத்தியோகபூர்வமாக அறி விக்கப்பட்ட எண்ணிக்கையை விடவும் 1.2 மில்லியன் பேர் அதிகமாக, அதாவது 3 மில்லியன் பேர் உயிரிழந்திருக்கலாம் என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள் ளது.

ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக் கழகத்தினால் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கடந்த வருட இறுதியில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரி ழந்தோரின் எண்ணிக்கை 3.4 மில்லி யனாக அதிகரித்துள்ளது.

எனினும் அந்த எண்ணிக்கை மிகத் துல்லியமானது என்று கூறமுடியாது என்று உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக் காட்டியுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டின் பின்ன ரைப் பகுதியில் சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் பரவலினால், அந் நாட்டில் 102,822 பேர் தொற்றுக்குள் ளானதாகவும் 4,846 பேர் உயிரிழந் ததாகவும் பதிவாகியுள்ளது.

எனினும் உண்மையில் அந்த எண் ணிக்கை பெருமளவிற்குக் குறைத்து மதிப் பிடப்பட்டுள்ளதாகவே கருதப்படுகின்றது என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# வவுனியா சிறைச்சாலையில் 10 கைதிகளுக்கு கொரோனா

(வவுனியா)

வவுனியாவில் சிறைச்சாலை கைதி கள் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்பு களைப் பேணியவர்கள் மற்றும் வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று மாலை வெளியாகின.

அதில், வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களை பேணியவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத் துள்ளனர். (ம-3,250)

### நாவற்குழி இடைநிலை சிகிச்சை மையத்தில்

# கொரோனாத் தொற்றாளர்கள் 300 பேருக்கு சிகிச்சையளிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி கொரோனா இடைநிலை சிகிச்சை மையத்தில் எந்த நேரத்திலும் 300 நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்தார்.

நாவற்குழி கொரோனா இடைநிலை சிகிச்சை மையத்தினை பார்வையிட்டு நாவற்குழி இடைக்கால சிகிச்சை மையத் தின் கட்டுமானத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தார்.

அச் சந்தர்ப்பத்தில், பாதுகாப்புப் படை களின் தளபதி கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வளங்களை ஆய்வு செய்து, புனரமைப்பு பணிகளை விரைவுபடுத்து மாறும் அறிவுறுத்தினார்.

அதனடிப்படையில் இடைநிலை சிகிச்சை மையத்தில் எந்த நேரத்திலும் 300 நோயாளிகளுக்கு இடமளிக்க முடியும் என தெரிவித்துள்ளார். (ம-3,30)

## விசர் நாய் கடித்...

என்பவரே இவ்வாறு உயிரிழந்தவரா வார்.

குறித்த குடும்பப் பெண்ணுக்கு 2 மாதங்களுக்கு முன்பு நாய் கடித்துள்ளது.

அதற்கு சிகிச்சை ஒன்றும் பெறாமல் அவர் உதாசீனமாக இருந்துள்ளார். பின்பு கடந்த 17ஆம் திகதி மூச்சுவிட சிரமப்பட் டுள்ளார்.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## தீக்காயத்துக்...

ளுக்குள்ளான மூதாட்டி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் வேலணை 8ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த தவநாயகம் சத்தியலோக நாயகி (வயது-77) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த மூதாட்டி கடந்த வியாழக் கிழமை வீட்டு வளவில் உள்ள குப்பைக்கு தீ வைத்துள்ளார்.

இதன்போது எரிப்பதற்கு மண்ணெண் ணையை ஊற்றியுள்ளார். அது தவறு தலாக அவரது ஆடையில் பட்டு தீப்பிடித் துள்ளது. இதனால் தீக்காயங்களுக்கு உள்ளான அவர் யாழ். போதனா வைத் தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசார ணையை யாழ்.போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார். (ம-3)

### வவுனியாவில்

# இளவயதினரை தாக்கும் கொரோனா

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜன வரி மாதம் முதல் மே 20 வரையான காலப் பகுதியில் 655 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர் களில் பெரும்பாலானோர் இளவயதினை சேர்ந்தவர்கள் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வவுனியா சுகாதார வைத் திய அதிகாரி பிரிவில் 544 பேரும் வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 54 பேரும் வவுனியா தெற்கில் 23 பேரும் செட்டிகுளம் பிரிவில் 34 பேரும் தொற் றாளர்களாக அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

குறித்த நபர்களில் 19 வயதிற்குட்பட்ட 50 தொற்றாளர்களும் 19 தொடக்கம் 30 வயதிற்கிடைப்பட்ட வயதுடைய 273 தொற்றாளர்களும் 31-40 வயதிற்குட்பட்ட 131 தொற்றாளர்களும் 41 வயதிற்கு மேற்பட்ட 197 தொற்றாளர்களும் இனங் காணப்பட்டுள்ளனர். (ம-3,299)

## +2,906...

அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனா தொற் றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 161,242 ஆக உயர் வடைந்துள்ளது. (ம-3)

## வடக்கு...

ஒருவரும் வட்டுக்கோட்டை பிரதேச வைத் தியசாலையில் ஒருவரும் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 2 பேரும் மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் 3 பேரும் மன்னார் நகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17 பேரும் பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேரும் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருவரும் பூவரசங்குளம் ஆதார வைத் தியசாலையில் ஒருவரும் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

உங்கள் கைகளோடு உங்கள் மனமும் பரிசுத்தமாக இருக்கட்டும்!
– கிரீஸ் நாட்டுப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் இலஞ்சம் தலைவிரித்தாடுகிறது

கொரோனாத் தொற்றிலிருந்து எங்ஙனம் தப்பிப்பிழைப்பது என்று தெரியாத நிலையில், நாடு முழுமைக்கும் பயணத் தடை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பயணத்தடை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய சேவைகள் தங்கு தடையின்றி இயங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதுதவிர, நோயாளர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லுதல் மற்றும் மரணச்சடங்கு போன்றவற்றைச் செய்வதற்கும் அனுமதி உண்டு.

இவையொருபுறமிருக்க, பயணத்தடை அமுலாகியிருப்பதால், தொழிற்றுறைகள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனால் மிகப்பெரும் பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென்பது மறுக்க முடியாத உண்மை.

என்ன செய்வது கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு பயணத் தடையை அமுலுக்கு கொண்டுவருவது தவிர்க்க முடியாதது என்ற நிலையில், அதுபற்றிய கருத்துரைப்புகளை முன்வைப்பது நியாயமானதல்ல.

நிலைமை இதுவாக இருக்கையில், பயணத் தடைக் காலத்தில் இலஞ்சம் பெற்றுக் கொள்வதில் பொலிஸார் மிகமோசமாக நடந்து கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்படுகிறது.

நேற்றைய தினம் (22) இருபாலையில் உள்ள ஆலயமொன்றுக்குச் சென்று பூசை நடத்திவிட்டு வீடு திரும்பிய சிவாச்சாரியரை இடைமறித்த பொலிஸார், பயணத்தடைக் காலத்தில் பயணிப்பதும் ஆலயத்தில் பூசை செய்வதும் தண்டனைக்குரிய குற்றம் எனக் கூறி, இலஞ்சம் பெற்றுள்ளனர்.

வழக்குத் தாக்கல் செய்வோம் என்று பொலிஸார் பயமுறுத்த; குறித்த சிவாச்சாரியர் ஐயாயிரம் ரூபாயை இலஞ்சமாகக் கொடுக்க வேண்டியிருந்தது.

இதுபோல நேற்று முன்தினம் (21) யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த தனது நண்பனின் வீட்டுக்குச் சென்ற ஒரு இளைஞனிடம்; அவரது அடையாள அட்டை இலக்கத்தில் இன்று (21) பயணிக்க முடியாது எனக் கூறி 1500 ரூபாயை பொலிஸார் இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறு பல்வேறு சம்பவங்கள் கடந்த சில தினங்களில் நடந்தாகியுள்ளது.

வேலையின்மை, பொருளாதாரக் கஷ்டம் என்ற இக்கட்டான சூழ்நிலையில் இலஞ்சமும் கொடுக்க வேண்டுமென்றால், நிலைமை என்ன? என்பதை பொலிஸ் அதிகாரிகள் மனுநீதி கொண்டு சிந்திக்க வேண்டும்.

தவிர, அடிப்படை மனச்சாட்சிகூட இல்லாமல் ஒரு சிவாச்சாரியரிடம் ஐயாயிரம் ரூபாயை இலஞ்சமாகப் பொலிஸார் பெற்றுக் கொள்கின்றனர் எனும்போது; அது சமயம் – இனம் – மொழி என்ற வகைமைக்குள் உட்படுத்திப் பார்க்கப்பட வேண்டிய விடயமாக ஆகிவிடும்.

எனவே பொலிஸார் இலஞ்சம் பெறுவது தொடர்பில் உடனுக்குடன் தகவல்களை அறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கங்களை பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதுடன் ஏதோவொரு வகையில் இலஞ்சத்தை ஒழிக்கவும் அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

# தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகும் மின்சார சபை ஊழியர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை மின்சார சபை ஊழியர்களின் கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால், மறு அறிவித்தல் இன்றி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட போவதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை மின்சார சபையின் 16 தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளன.

தேசிய மின் விநியோக கட்டமைப்பை தொடர்ந்தும் நடத்திச் செல்வது மற்றும் ஊழியர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக தாம் இந்த கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன.

மின்சார சபையின் ஊழியர்களுக்கு தடுப்பூசியை வழங்குவது, மருத்துவ உதவி நடைமுறை, ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் கோவிட் தொற்றால் உயிரிழக்கும் ஊழியர்களை நம்பி வாழும் நபர்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளன. (4)

# முல்லைத்தீவு பாலங்குளத்தினை புனரமைப்புச் செய்யவும்

## விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு பாலங்குளத்தின் வாய்க்காலினை புனரமைக்குமாறு அக்குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கமநல சேவை நிலையத்தினால் கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் குளத்தின் பிரதான வாய்க்கால் இருபக்கங்களிலும் கொங்கிறீட்டிலான வாய்க்காலாக அமைக்கப்பட்ட போதிலும் குறித்த வாய்க்காலின் ஒரு பக்கம் நூற்று ஐம்பது மீற்றர் வரை உடைந்த வீழ்ந்த நிலையில் புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

குறித்த வாய்க்காலினை புனரமைத்துத் தருமாறு இக்குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதே வேளை பாலங்குளத்தின் அணைக்கட்டினையும் உயர்த்தி அதன் கீழான வாய்க்கால்களையும் புனரமைக்குமாறு கடந்த பத்தாண்டுகளாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற கூட்டங்களில் தொடர்ச்சியாக இக்குளத்தின் கீழான விவசாயிகள் கோரிக்கை விடுத்து வரும்நிலையில் குளத்திற்கான வேலைகள் இடம்பெறவில்லை.

இக்குளம் முழுமையாக புனரமைக்கப்படுமானால் நூறு ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (4,6,350)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** புதுர்கோவிலடி, புத்தூர் கோபுரம், புதூர் கிராமம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ரோட்மண்ட் எலக்ட்ரோ எலக்ட்ரிக்கல், குருக்கள் புதுக் குளம்-மணியர் குளம், மணியர்குளம் (வீட்டுத்திட்டம்), நித்திய நகர், ரங்கீத்கம, சங்கராபுரம், வாரிக்குட்டியூர் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்றத்தின் 39 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மேற்படி கலைமன்ற செயற்குழுவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை (23) காலை-09 மணி தொடக்கம் மாலை-01 மணி வரை சுழிபுரம் மேற்கு பாரதி முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தற்போது கொரோனாத் தொற்றுக் காரணமாக மீண்டும் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இரத்ததான முகாம் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 316 3621 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4,6,18)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ "நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும் போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்க ட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்."

❖ நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியில் கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும் வேறு ஒன்றுக்கும் உதவாது.

❖ நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது. 15எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை; மாறாக விளக்குத் தண்டின் மீதே வைப்பர். அப்பொழுதுதான் அது வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒளி தரும். இவ்வாறே, உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள். (தொடரும்)

# கொவிட் தடுப்பு செயலணியின் முடிவே இறுதியானது

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

கொவிட் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் தேசிய கொவிட் தடுப்புச் செயலணி வெளியிடும் தகவல்களே அரசின் இறுதியானதும் உத்தியோகபூர்வமானதும் முடிவுகளாகும் என தேசிய கொவிட் தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாள்தோறும் நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்படும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையின் இறுதி முடிவை இரவு வேளைகளில் நாம் வெளியிடுகின்றோம். அந்த எண்ணிக்கையில் முரண்பாடு எதுவும் இல்லை.

அதேவேளை, கொவிட் தடுப்புச் செயலணி மாவட்டம் தோறும் சேகரிக்கும் தரவுகளுக்கமையவே ஒவ்வொரு மாவட்டங்களிலும் நாள்தோறும் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மறுநாள் காலை தேசிய கோவிட் தடுப்புச் செயலணியால் வெளியிடப்படுகின்றது.

மாவட்ட செயலர் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோர் தனித்தனியே வெளியிடும் எண்ணிக்கையில் முரண்பாடு இருக்குமானால், அதற்கு நாம் பொறுப்பல்ல. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

# எதிர்க்கட்சியினருக்கு எதிராக விசாரணை நடத்துக

## கடுவலை நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு கடுவலை நீதிவான் நீதிமன்றத்தால் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பாராளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போது நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தின்படி ஆர்ப்பாட்டத்தை நடத்த முடியாது என்று பொலி ஸார் அறிவித்திருந்த நிலையிலும் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று தலங்கம பொலிஸார் நேற்று கடுவலை நீதிமன்றத்தில் விளக்கமளித்துள்ளனர்.

இதன்படி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றவில்லை என்றும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர். (4)

# நெருக்கடியானநிலை நீடித்தால் பயணத்தடை தொடரும்

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



(கொழும்பு)

*எதிர்வரும் 28ஆம் திகதிவரை பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை நீடிப்பது தொடர்பில் தேவை ஏற்படும்பட்சத்தில், 25, 26 அல்லது 27ஆம் திகதிகளில் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.*

சுகாதார பிரிவு சுட்டிக்காட்டுகின்ற விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் எதிர்வரும் 25ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர், அன்றைய தினமே (25) இரவு 11 மணிக்கு மீண்டும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு, எதிர்வரும் 28ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படவுள்ளது.

எனினும், இந்தப் பயணக் கட்டுப்பாட்டை தளர்த்தாது, தொடர்ந்து 14 நாட்களுக்கு நாட்டை முடக்குமாறு சுகாதார தரப்பினர் கோரியிருந்தனர்.

கொவிட் தொடர்பான செயலணியின் பரிந்துரைகள் குறித்து தாம் அவதானம் செலுத்துவதாகவும்,

தேவை ஏற்படுமாக இருந்தால், தொடர்ந்து பயணக் கட்டுப்பாடு விதிப்பது குறித்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்க முடியும் என இராணுவ தளபதி தெரிவித்துள்ளார். (4)

# துறைமுக நகர சட்டமூலம் தொடர்பில் அரசு சரியான பாடம் கற்கும்

## முன்னாள் சபாநாயகர் கரு எச்சரிக்கை



(கொழும்பு)

மதத்தலைவர்கள், அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைக்கு மதிப்பளிக்காத அரசாங்கம் அதற்கான பாடத்தை மிகவும் கடினமான வழிகளில் கற்றுக் கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய எச்சரித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது டுவிட்டர் பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அவசரமாக துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டாமென மதத்தலைவர்கள், அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்கவில்லை.

துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலம் நாட்டின் அரசியலமைப்பிற்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் பொதுமக்களின் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் செவிமடுப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை என்றால், அதற்கான பாடத்தை அரசாங்கம் மிகவும் கடினமான வழிகளில் கற்றுக்கொள்ள நேரிடும்.

துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் 34 பிரிவுகள் அரசியலமைப்பிற்கு முரணானவையாக இருப்பதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ள நிலையிலும், அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசாங்கம் காண்பித்த அவசரம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

# 423 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக மாகாண எல்லைப்பகுதிகளை கடக்க முற்பட்ட 215 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதன்போது தனிமைப் படுத்தல் சட்டவிதி களுக்கு புறம்பாக செயற்பட்டதாக 423 பேர் கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச் சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (4)

# தொற்றாளர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கும்

## கொழும்பு மருத்துவ பீட பேராசிரியர் மனோஜ் எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் தினமும் அடையாளம் காணப்படும் கொவிட் - 19 தொற்றாளர்களின் எண்ணிக்கையானது மே இறுதியிலும், ஜூன் மாதத்திலும் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என கொழும்பு மருத்துவப் பீடத்தின் பேராசிரியர் மனோஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொவிட் - 19 வைரஸ் வேகமாக பரவிய பல நாடுகளில் கடும் பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் மூலமே தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து சுகாதார துறையினர் அரசாங்கத்திற்கு தெளிவுப் படுத்தியுள்ளதாகவும், அது சம்பந்தமாக இறுதி தீர்மானத்தை எடுக்க வேண்டியது அரசாங் கத்தின் பொறுப்பு எனவும் மனோஜ் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது காணப்படும் நிலைமையில் விரைவில் தினமும் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரமாக அதிகரிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். (4)

# பூசணிக்காய் ஏற்றுமதிக்கு பொறிமுறை ஒன்றை உருவாக்குங்கள்

## மாவட்ட செயலரிடம் விவசாயிகள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேங்கியுள்ள பூசணிக்காய்களை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை மாவட்டச் செயலாளர் ஏற்படுத்த வேண்டும் என உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தினாலும் விவசாயத் திணைக்களத்தினாலும் உப உணவுப் பயிர்ச் செய்கைகள் ஊக்குவிக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான கிலோ பூசணிக்காய்கள் மாவட்டத்தில் ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது. துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் விவசாயிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவு பூசணிக்காய்களை விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே இப்பயிர்ச் செய்கைக்கு ஊக்குவித்த மாவட்டச் செயலகமும் விவசாயத் திணைக்களமும் மாவட்டத்தில் இருந்து பூசணிக்காய்களை ஏற்றுமதி செய்வதற்கான பொறிமுறை ஒன்றினை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு மாவட்டச் செயலாளரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-350)

## விசேட பூஜை வழிபாடு


உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோ னாத் தொற்று தாக்கத்திலி ருந்தும் அனைத்து நோய் நொடி களிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக் களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் கோப் பாய் புத்தூர் கன்னியர் வைர வர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற வுள்ளது. விசேட பூசை வழி பாடுகளின் நிறைவில் ஆல யத்தின் பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ கிஸ்ணமூர்த்திக் குருக்கள் அவர்களின் அருளாசி உரை யும் வேத பாராணமும் இடம் பெறவுள் ளது. இலங்கை ஒலிப ரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம் " நிகழ்ச்சியில் காலை 6.30 மணி க்கு நேரடி ஒலி பரப்பாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-6)

# நான்கு கிலோ கஞ்சாவுடன் விசுவமடுவில் மூவர் கைது

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் விசுவமடுப் பகுதியில் 4 கிலோ கஞ்சா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வாகனம் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டபோதே குறித்த கஞ்சாப் பொதிகள் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் போது சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளையும் கைதானவர்களையும் தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



(4,6,100,316)

# ஆடுகள் கடத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரால் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

அனுமதிப்பத்திரமின்றி ஆடுகளை கொண்டுசென்ற நபர் ஒருவரை கனகராயன்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். கனகராயன் குளம் பகுதியில் இருந்து அனுராதபுரம் நோக்கி சென்ற வாகனத்தினை கனகராயன்குளம் பகுதியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வழிமறித்து சோதனைகளை மேற்கொண்டனர். இதன்போது உரிய அனுமதிப்பத்திரமின்றி 24 ஆடுகளை கடத்திச்சென்றுள்ளமை தெரிய வந்துள்ளது. குறித்த வாகனத்தின் சாரதியை கைது செய்த இராணுவத்தினர் அவரை கனகராயன்குளம் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-299)

# தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு

(அக்கராயன்)

முல்லைத்தீவில் கொவிட்19 அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு கரைதுறைபற்று பிரதேச சபை முடிவு எடுத்துள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்கள் முடக்கப்படுகின்ற போது அல்லது குடும்பங்கள் தனிமைப் படுத்தப்படுகின்ற போதோ குடி நீர் பிரச்சினை ஏற்படுமாயின் கரைதுறை பற்று பிரதேச சபையின் வட்டார உறுப்பினர்கள் அல்லது உப பிரதேச சபை பொறுப்பதிகாரிகள், கிராம அலுவலர்கள் ஆகியோருடன் தனிமைப்படுத்துப்பட்டுள்ள குடும்பங்கள் தொடர்பு கொள்ளும் வேளையில் இலவசமாக குடிநீரைவழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனகரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க. விஜிந் தன்அறிவித்துள்ளார். (4-350)

# முசலி கஜிவத்தை பகுதியில் பல ஏக்கர் காடழிப்பு

(மன்னார்)

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட கஜிவத்தை பகுதியில் உள்ள அடர்ந்தகாடுகள் அண்மைக்காலமாக அழிக்கப்பட்டு வருவதாகது. முசலி பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.



இவ்விடையம் தொடர்பாக முசலி பிரதேச சபையின் தவிசாளரை தொடர்பு கொண்டு வினவிய போது முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள கஜிவத்தை பகுதியில் அண்மைக் காலமாக பல ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றது. இது யாருடைய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக இடம் பெற்று வருகின்றது என்பது தெரியவில்லை. அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் குறித்த பகுதியில் பல ஏக்கர் காடுகளை அழிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (4,6,285)

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது - 2021



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் செஞ்சொற் செல்வர், கலாநிதி. ஆறு. திருமுருகனைக் கௌரவித்து பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கி புதியதோர் அறக்கட்டளையை நிறுவியுள்ளது.

ஆண்டு தோறும் எம்மண்ணில் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆற்றலாளர் இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தல் என்ற திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

அந்தவகையில் 2021 ஆண்டுக்கான ஆற்றலாளர் விருது பெறுபவர்களாக நரம்பியல் சத்திரசிகிச்சை வைத்தியநிபுணர் பொன்னம்பலம் ஆதித்தன் (யாழ் போதனா வைத்திய சாலை) பேராசிரியர் கலாமதி முருகானந்தன் (மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரை அறநிதியச்சபை தெரிவு செய்துள்ளது.

மேலும் நாட்டின் அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு அறநிதிய வைபவம் பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4,6,18)



# சிறுவர் அரங்கம்

## அதிபுத்திசாலி மன்னரும் அப்பிராணி அமைச்சரும்

“உலகிலேயே தலைசிறந்த மன்னனான என்னை இந்த நாட்டில் வணங்காதவர்களும் இருக்கின்றனர்.” “தங்களை எதிர்த்துப் பேசுவதற்கு மன்னிக்க வேண்டும்.

தங்களை வணங்காதவர்கள் நம் நாட்டில் இருக்கவே முடி யாது மன்னா” என்றார் அப்பிராணியார்.

எதிர்த்துப் பேசியதற்கு என்ன தண்டனை தரப் போகிறாரோ என்ற அச்சத்தில் அவருடைய உடல் நடுங்கியது.

“அப்படியா வாருங்கள் என்னோடு” என்று சொன்ன மன்னர், விறுவிறுவென்று அரண்மனைத் தோட்டம் நோக்கிச் சென்றார்.

வேறு வழியில்லாததால் முக்கிய அமைச்சரான அப்பிராணியாரும் ஏனைய அமைச்சர்களும் அவர் பின்னே சென்றனர்.

மன்னர் குய்யோமுறையோ அப்பிராணியாரைப் பார்த்து, “பார்த்தீர்களா அமைச்சரே, இந்தத் தோட்டத்தில் நான் வந்து நின்று சில நொடிகள்ஆகியும், அந்த மரம் என்னை வணங்கவில்லை, இந்தச் செடிகொடிகள் என்னை வணங்கவில்லை.



அதோ மேலே தெரிகிறதே வானம் அதுகூட என்னை வணங்கவில்லை, இவ்வளவு ஏன் அதோ தூரத்தில் தெரிகிறதே அந்த மலைகூட என்னைவணங்கவில்லை” என்று கோபப்பட்டார்.

“மன்னா, தாங்கள் எங்களுக்குத்தான் மன்னர். அதனால் நாங்கள் வணங்குகிறோம். இயற்கையைத்தான் மனிதர்கள் வணங்க வேண்டுமே தவிர, இயற்கை மனிதர்களை வணங்க வேண்டிய அவசியம் இல்லை” என்று தன்னை அறியாமல் பேசி விட்டார் அப்பிராணியார்.

என்ன நடக்கப்போகிறதோ என்று ஏனைய அமைச்சர்கள் பயந்தனர். மன்னர் கோபத்துடன், “யாரிடம் பேசுகிறீர்கள் என்று தங்களுக்கு மறந்துவிட்டதோ?” என்று கேட்டார்.

“மன்னா, அவை எல்லாம் எப்படி வணங்கும்? நீங்களே சொல்லுங்கள்?”

(தொடரும்)

# மகாபாரதம்



85

சிறந்த வீரர்கள் அங்கு செல்ல உன் கடமையைச் செய். இது தர்ம யுத்தம் என்பதை நினைவில் கொள். இங்கு நீ தயக்கம் காட்டினால் புகழை இழப்பாய். அத்துடன்மட்டுமன்றி அது உனக்கு பழியும் தரும்.

இரக்கத்தால் நீ போராடவில்லை என பகைவர்கள் எண்ண மாட்டார்கள். போரிட அஞ்சுகிறாய் என சிறுமைப்படுத்துவர். உனக்கு அந்த இழுக்கு வரலாமா?இதைவிடப் பெருந்துன்பம் எதுவுமில்லை. வென்றால் இந்த மண்ணுலகம், வீர மரணம் அடைந்தால் விண்ணுலகம். இதனை மறக்காது துணிந்து போர் செய்.

வெற்றி, தோல்வி பற்றியோ இன்ப, துன்பம் பற்றியோ, இலாப நஷ்டம் பற்றியோ கருதாமல் ஊக்கத்துடன் போர் செய். பழி,பாவம் உன்னைச் சாராது. புகழும், புண்ணியமும் உனக்குக் கிடைக்கும்” என கண்ணன் தமது உரையை முடித்தார்.

கண்ணனின் அறிவுரை கேட்டதும் பார்த்தனின் மனக்குழப்பம் தீர்ந்தது. அவன் கண்ணனைவணங்கி “அச்சுதா என் மயக்கம் ஒழிந்தது. என் சந்தேகங்கள் தீர்ந்தன. இனி உன் சொல்படி நடப்பேன்” எனக் கூறி போரிடத் தயாரானான். (தொடரும்)

**கீதையின் போதனை**

போர்புரியமாட்டேன் என்ற அருச்சுனனை மாற்றுவதற்காக எடுத்தாளப்பட்ட ஐந்து வாதங்கள் மனிதர்கள் அனைவருக்கும் கண்ணனால் கூறப்பட்ட போதனைகள்என இந்து சமய நம்பிக்கையுடையவர்களுக்குச் சொல்லப்படுகிறது.

பற்றுகளை அறு. அதற்காக புலனடக்கம் என்ற யோக சாதனையைச் செய்துகொண்டே இரு.

பலனில் பற்றற்று சுயதருமத்தை ஒழுகு.

ஈசனை மறக்காதே. அந்த இரண்டற்ற பரம்பொருளிடம்சுயநல மற்ற பக்தியைச் செலு த்து.

அம்மெய்ப் பொருளையே புகலிடமாகக் கொள்.

யாரையும் எதையும் வெறுக்காமலிருக்கும் சமநோக்கு அல்லது பிரும்ம உணர்வு என்னும் முடிவை நோக்கிச் செல்.

# சட்டமா அதிபர் திணைக்களத்தில் தமிழ் மொழி நீக்கம்

## சீன மொழி இடம்பெற்றுள்ளது

(கொழும்பு)

சீனாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்கள புதிய கட்டடத்தில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, சீன மொழி இடம்பெற்றுள்ளது. கட்டடத்தின் நூலகப் பிரிவு குறித்த பெயர்ப் பலகையில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் சீன மொழிகள் காணப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பெயர்ப் பலகையில் இலங்கையின் தேசிய மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



சட்டமா அதிபர் திணைக்களத்தின் உள்ளக ஈ நூலகமொன்றுக்கு சீன அரசாங்கம் நிதி உதவி வழங்கியதாகவும் அதற்கு நன்றி பாராட்டும் வகையில் பெயர்ப் பலகையில் சீன மொழி உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் சீன தூதரகம் பதிலளித்துள்ளது.

ஏற்கனவே கொழும்பு துறைமுக நகரின் ஓர் பகுதியில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை பாராளுமன்றிலும் விமர்சனம் செய்யப்பட்ட நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் நூலக பெயர்ப் பலகை மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ம-03)

## சமூக ஊடகங்களில்

# போலிப் பரப்புரை செய்த ஒருவர் கைது

(கொழும்பு)

சமூக ஊடக வலைப்பின்னல்களைப் பயன்படுத்தி தவறான பரப்புரை செய்ததற்காக கெலியோயா பகுதியில் உள்ள ஒருவரை குற்ற விசாரணைப் பிரிவு கைது செய்துள்ளது.

“சந்தேக நபரின் முகநூல் கணக்கை பரிசீலித்த, காடுகளை அகற்றுவது தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் அடங்கிய விளம்பரங்களை அவர் வெளியிட்டமை கண்டறியப்பட்டது.

இருப்பினும், அனைத்து விளம்பரங்களிலும் பல்வேறு நபர்களின் தனியார் நிலங்களில் பற்றைகள் வெட்டும்போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்களே அவ்வாறு பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது.

பொய்யான செய்தி பரப்பிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார்” என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அஜித் ரோகண தெரிவித்தார். (ம-03)

# கடந்த 7 நாட்களில் மாத்திரம் 17 ஆயிரம் பேருக்கு கொரோனா

## 211 மரணங்கள் பதிவு

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஏழு நாட்களில் மாத்திரம் 17,000 இற்கும் அதிகமானோருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளதாக கோவிட்-19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த காலப்பகுதியில் 211 மரணங்கள் பதிவாகியுள்ளன.

அந்தவகையில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்று உறுதியானவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 800 பேருக்கு நேற்று கோவிட்- 19 தொற்று உறுதியாகியுள்ளது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 617 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 280 பேரும் கண்டியில் 172 பேரும் குருநாகல் மாவட்டத்தில் 297 பேரும் காலியில் 278 பேரும் கேகாலையில் 109 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், அநுராதபுரத்தில் 108 பேருக்கும் மாத்தறையில் 109 பேருக்கும் திருகோணமலையில் 93 பேருக்கும் பதுளையில் 34 பேருக்கும் யாழ்ப்பாணத்தில் 86 பேருக்கும் தொற்று உறுதியாகியுள்ளதாக கோவிட்-19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அமுலாக்கப்பட்டுள்ள நடமாட்ட கட்டுப்பாடுகள் காரணமாக நாடளாவிய ரீதியில் பொலிஸார் வீதித் தடைகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் அத்தியாவசிய தேவைகள் இன்றி வெளிச்செல்லும் நபர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 423 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-03)

# இந்தியாவை மிரட்டி வரும் கறுப்பு பூஞ்சை தொற்றுடன்

## இலங்கையிலும் ஒருவர் அடையாளம்

(இந்தியா)

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பரவிவரும் கறுப்பு பூஞ்சை எனப்படும் கிருமித் தொற்றானது மிக வேகமாக பரவி வருகிறது.

இந்நிலையில், குறித்த கறுப்பு பூஞ்சை நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த நபர் அம்பாறை பகுதியில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரி டொக்டர் பிரசாத் கொலம்பகே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கிருமி அதிகரிக்குமாக இருந்தால், நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது மாத்திரமன்றி, மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.



இந்த கிருமி, கோவிட் வைரஸ் தொற்றுடன் எவ்வாறு இணைந்தது என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் மிகவும் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் கூறுகின்றார். இந்த நோய் அம்பாறை பகுதிக்கு எவ்வாறு வந்தது என்பது தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார். (ம-03)

## பரீட்சைத் திணைக்களத்தின் சேவைகளை

# கைபேசியில் பெறுவதற்கு புதிய செயலி அறிமுகம்

(கொழும்பு)

பரீட்சைகள் திணைக்களத்தின் அனைத்து சேவைகளையும் வீட்டிலிருந்து அலைபேசி வழியாக செய்ய அனுமதிக்கும் புதிய செயலியை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இணையத்தில் சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தல், முடிவுகளை உறுதிப்படுத்துதல், பரீட்சை எண்ணைக் கண்டறிதல், வரும் ஆண்டுக்கான பாடசாலை பரீட்சை விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்தல் மற்றும் அரச சேவை பரீட்சைகளைக் கண்காணித்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் புதிய செயலியில் செய்யலாம்.

பரீட்சை திகதிகள், கடந்த 5 ஆண்டுகளின் வினாத்தாள்களை பதிவிறக்கம் செய்தல், விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்தல், இணைய பரீட்சை முறை, பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் புள்ளியிடல் தாள்களைப் பதிவிறக்குதல், பாடசாலை பரீட்சைகளுக்கான இணையவழி விண்ணப்பம் போன்றவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-03)

## முகக் கவசத்தை முறையாக அணியாது

# வியாபாரம் செய்து கொண்டிருந்த நெல்லியடி வியாபாரிக்கு

## கொரோனா தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

முகக் கவசத்தை சரியாக அணியாமல் வியாபாரம் செய்து கொண்டிருந்த நெல்லியடி பழைய சந்தை வியாபாரிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வியாபாரி முகக் கவசத்தை முறையாக அணியாமல் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் பொது சுகாதார பரிசோதகர்களால் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியான நிலையில் வியாபாரிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. (ம-03)

### சீனாவுக்கு துறைமுக நகர் வழங்கும் போது

# தமிழர்களுக்கு மட்டும் ஈழத்தை வழங்குவதற்கு ஏன் எதிர்த்தீர்கள்?

### ராஜித சேனாரத்ன கேள்வி



(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள், தமிழ் மக்களுக்கு ஈழத்தை வழங்குவதை மாத்திரமே எதிர்க்கின்றனர்.

வெளிநாட்டவர்களுக்கு ஈழத்தை வழங்குவதில் இவர்களுக்கு எவ்வித சிக்கலும் இல்லை. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால்கூட ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரம் பகிரப்பட்டிருக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் ஈழத்திற்கும் நாடு பிளவடைவதற்கும் எதிரானவர்கள் என்று பாரியளவில் கூச்சலிட்டவர்கள்தான் இன்று கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்திற்கு ஆதரவளித்துள்ளனர்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்றல்லவா கூறினார்கள்? இன்று ஒரே நாடு ஒரே சட்டம் எங்கிருக்கிறது? இந்த வலயத்திற்கு ஒரு நீதியும் எமது வலயத்திற்கு ஒரு நீதியுமே காணப்படுகிறது.

இதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் பெடரல் அதிகாரத்தை விட அதிகமானதாகும். இந்த வலயம் தனி இராச்சியமொன்றாகும். இது தனி ஈழமாகும்.

இதனை தனி ஈழமாகக் குறிப்பிடுவதற்கு தற்போது குறைவாகவுள்ள ஒரே காரணி அந்நாட்டு பொலிஸார் இந்த வலயத்தில் இல்லாதது மாத்திரமேயாகும்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்தினால் நாடு பிளவடையும் என்று கூறினார்கள். 13 இற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் வெட்கமின்றி துறைமுக நகர சட்ட மூலத்திற்கு ஆதரவளித்துள்ளனர்.

13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால்கூட, ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரம் பகிரப்பட்டிருக்கும். தமிழ் மக்களுக்கு ஈழத்தை வழங்குவதை மாத்திரமே இந்த தேசப்பற்றாளர்கள் எதிர்க்கின்றனர். வெளிநாட்டவர்களுக்கு ஈழத்தை வழங்குவதில் இவர்களுக்கு சிக்கல் இல்லை.

குறித்த சட்ட மூலத்திற்கு ஆதரவளித்த அனைவரும் போலியான தேசப்பற்றாளர்கள் ஆவர். தற்போதைய அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் மாத்திரமே மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகிறது.

நாம் தொடர்ந்தும் பாராளுமன்றத்திற்கு வெளியிலும் இதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்போம். 1977 இல் ஜே.ஆர்.ஜயவர்தன திரட்டியதைப் போன்று மக்கள் படையை இதற்கு எதிராக நாமும் திரட்டுவோம் என்றார். (ம-03)

# அனைத்து விமான சேவைகளும் இரத்து

(கொழும்பு)

நேற்று முன்தினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் 31 ஆம் திகதி நள்ளிரவுவரை அனைத்து விமானச் சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இவ்வறிவித்தலை சிவில் விமானச் சேவைகள் அதிகார சபை வெளியிட்டுள்ளது.

கோவிட் தொற்றைக் கருத்திற்கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கையிலிருந்து பயணிக்க இருக்கும் பயணிகளுக்கு எந்தவித தடையுமில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சரக்கு விமானங்களுக்கு அனுமதியுள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது. (ம-03)

# கொரோனா தொற்றாளர்களை வீடுகளில் பராமரிக்கும் நடைமுறை ஆரம்பம்

(கொழும்பு)

அறிகுறியற்ற கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களை வீடுகளிலேயே தங்கவைத்து பராமரிக்கும் முறைமை இலங்கையில் நேற்று முன்தினம் முதல் பரீட்சார்த்தமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த நடைமுறை பரீட்சார்த்த முயற்சியாக களுத்துறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தற்போது 30,000 இற்கும் மேற்பட்ட தொற்று நோயாளிகள் மருத்துவமனை, தனிமைப்படுத்தல் கண்காணிப்பு மையம், கொரோனாச் சிகிச்சை மையங்கள் மற்றும் பிற இடங்களில் கிசிச்சை பெற்று வருகின்றனர். தொற்று நோயாளர் தொகை அதிகரித்துள்ளதால் சுகாதாரத் துறையினர் அவர்களைப் பராமரிக்க முடியாது திண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் நாட்டில் அதிகளவான தொற்று நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டுவரும் மேல் மாகாணத்திலும் தொற்று நோயாளிகளை வீடுகளிலேயே தங்கவைத்துக் கண்காணிக்கும் முறைமையை விரிவுபடுத்த அதிகாரிகள் முயன்று வருகின்றனர். களுத்துறை மாவட்டத்தில் பரீட்சார்த்த முயற்சியாக முன்னெடுக்கப்படும் வீட்டில் தனிமைப்படுத்தும் திட்டம் சரியாக அமைந்தால் வீடுகளில் தொற்று நோயாளிகள் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுவர்.

இலங்கையில் தொற்று நோய் தொடங்கியதில் இருந்து இது வரை தொற்று உறுதி செய்யப்படும் நோயாளர்கள் கிசிச்சை மையங்களுக்கே அனுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளனர். எனினும் சிகிச்சை மையங்களில் தற்போது இடமில்லாததால் வீட்டில் தங்கவைத்து பராமரிக்கும் திட்டம் நடைமுறைக்கு வந்தது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் அதிக நோய் அறிகுறி உள்ளவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை மையங்களில் பராமரிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

### பயணத்தடைக் காலத்தில்

# ஆலயங்களில் பூஜை நிகழ்வை சிரமமின்றி நடத்த அனுமதிக்குக

### அகில இலங்கை சைவ குருமார் அர்ச்சகர் சபை செயலாளர் மகாலிங்க சிவக்குருக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கொரோனா பயணத்தடை காலத்தில் குருமார்கள் ஆலயத்தில் நித்திய பூஜை நிகழ்வுகளை சிரமமின்றி நடத்துவதற்கு அனுமதிக்குமாறு அகில இலங்கை சைவ குருமார்கள் அர்ச்சகர் சபை செயலாளர் சிவஸ்ரீ ச.மகாலிங்க சிவக்குருக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கோவிட் -19 வைரஸ் தொற்றுக் காரணமாக எமது நாடு கடுமையான பாதிப்பிற்குள்ளாகி இருக்கின்றது. இதன் காரணமாக பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

எமது ஆலயங்களில் இறைவனுக்குரிய நித்திய பூஜைகள் தடையின்றி நடத்தப்பட வேண்டும் என்பது சைவ சமய விதிமுறை. அதைக்கருத்தில்கொண்டு கடந்த மாதம் 14,15,16 ஆகிய தினங்களில் பயணத்தடை நடைமுறையில் இருந்தபோதும் எமது குருமார்கள் தம்மால் இயன்றவரை ஆலய நித்திய பூஜைகள் தடைப்படாது இருப்பதற்கு தமது கடமையை ஆற்றினார்கள். இருந்தபோதும் பல இடங்களில் அவர்கள் ஆலயத்திற்கு செல்வதில் சிரமங்களைச் சந்தித்தார்கள் என்பதை நாம் அறிய முடிந்தது.

ஆலயங்களுக்கு அருகில் வசிக்கும் குருமார்களுக்கு இக்காலத்தில் ஆலயக் கடமையை ஆற்றுவதற்கு சிரமங்கள் ஏற்படாது. ஆனால் தூர இடங்களில் இருக்கின்ற ஆலயங்களுக்கு குருமார்கள் செல்வது மிகச் சிரமமானதாகவே இருக்கின்றது. பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுபவர்களினால் குருமார்கள் மிகுந்த மன அழுத்தத்தைச் சந்திக்கின்றார்கள்.

அத்துடன் அனைத்து ஆலயங்களிலும் ஆலயத்தில் தங்கி நின்று கடமையாற்றக்கூடிய வசதிகளும் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே அமுலில்வரும் பயணத்தடைக் காலங்களில் குருமார்கள் நித்திய பூஜைகளை ஆற்றுவதற்கு செல்ல பயண அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களமும் மாவட்டச் செயலகமும் இணைந்து ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# யாழ். பொம்மைவெளியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப்பொருளுடன் யாழ். பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் பொம்மைவெளிப் பகுதியில் பிறிதொரு நபருக்குப் போதைப்பொருட்களைக் கைமாற்றும் செயற்பாட்டில் வீதியில் நின்றிருந்தவேளை கைது செய்யப்பட்டார் என்று யாழ். பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

பொம்மைவெளிப் பகுதியில் பெருமளவில் போதைப்பொருள் நுகர்வு மற்றும் விற்பனை இடம்பெற்று வருவதால் அங்கு பொலிஸார் தமது சுற்றுக்காவல் கடமைகளை அதிகரித்துள்ளனர்.

இந்தநிலையில், வீதியில் சந்தேகத்துக்கிடமாக நின்றிருந்த குறித்த நபரை பரிசோதித்த வேளை அவரது பையினுள் 3 கிராம் 270 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. (ம-03)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2021 இல் வெளியிடப்பட்டது.